திரித்துவக் குடும்ப மாதாந்திர மலர்

# திரித்துவச் சுடர்

தனிச்சுற்றுக்கு மட்டும்

பிப்ரவரி 2024



பொங்கல் விழா சிறப்புத் திருப்பலிக்கு, பங்குமக்கள் பங்குத் தந்தையர்களை வரவேற்றனர்.

## திருத்தந்தையின் மன்றாட்டுக்கருத்து



தீராத நோயால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் குடும்பங்களும் தேவையான உடல் மற்றும் ஆன்ம கவனிப்பும் தோழமையும் பெற நாம் மன்றாடுவோம்.

We pray that terminally ill people and their families receive the necessary physical and spiritual care and accompaniment.

## அன்பிய இறைவார்த்தை – பிப்ரவரி
## இணைச்சட்டம் 26:16-19

## பங்கின் இலக்கு
### PARISH VISION STATEMENT

தூய தமத்திரித்துவ பங்கு மக்களாகிய நாங்கள் இயேசுவின் சீடர்களாக, அருள் வாழ்வின் குழுமமாக, திருவழிபாடு, அருட்பணி, அனைவரையும் உள்ளடக்கிய பணிகளின் வழியாக இயேசுவின் கனவான இறையாட்சியை இம்மண்ணில் கட்டியெழுப்ப அழைக்கப்பட்டுள்ளோம்.

WE THE PEOPLE OF HOLY TRINITY PARISH AS A COMMUNITY OF DISCIPLES OF JESUS CHRIST ARE CALLED TO BUILD HERE ON EARTH THE KINGDOM OF GOD, THE DREAM OF JESUS CHRIST THROUGH LITURGY AND INCLUSIVE PASTORAL MINISTRIES.

## பங்குத் தந்தையின் செய்தி

தூய திரித்துவத்திற்குள் என் அருமையான பங்கு மக்களே! அனைவருக்கும் இறை ஆசீரும் வாழ்த்துகளும். இறைவன் நம் அனைவருக்கும் ஒரு புதிய ஆண்டினை கொடையாக தந்துள்ளார். நன்றி உணர்வோடும் பொறுப்புணர்வோடும் பெற்று கொண்டு இறைவனின் திருவுளத்தை தினமும் வாழ்ந்து காட்டுவோம். ஜனவரி மாதத்தின் பல அருமையான நிகழ்வுகளை நம் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வெளிப்பத்தும் வண்ணம் செயல்படுத்தி உள்ளோம். அனைவருடைய ஒத்துழைப்புக்கும் ஈடுபாட்டிற்கும் மிகுந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம். பிப்ரவரி மாதத்தை தொடங்கி உள்ளோம். குறிப்பாக இந்த மாதத்தில் பிப்ரவரி 14 ஆம் தேதி விபூதி புதனோடு தவக்காலத்தை தொடங்க உள்ளோம். இக்காலத்தில் சிலுவையின் வழியில் கடவுளின் அன்பை உணர அழைக்கப்படுகிறோம். ஆண்டவருடைய பாடுகள் மரணம் மற்றும் உயிர்ப்பின் வழியாக நாம் அனைவரும் முடிவில்லா வாழ்வை பெற்றுக் கொள்கிறோம். இக்காலத்தில் நமது பாவங்கள் மற்றும் குறைபாடுகளை எண்ணி, முழுமையாக மனம் மாறி, கடவுளின் பிள்ளைகளாய் மனமகிழ்வோடு சாட்சிய வாழ்வு வாழ்ந்திட நம்மையே ஆயத்தமாக்குவோம்.

**Dear Brothers and sisters in the Holy Trinity! May God bless you all. We sincerely thank all for the cooperation extended towards the upliftment of our parish. We are starting Lent on Feb 14. This season of grace is set aside to remember the love of God that is poured out through Christ Jesus on the Cross in his death and resurrection. This season helps us remember to be repentant and remind us of our sin and mortality. Let us make use of this lent to receive God's forgiveness and mercy.**

உங்கள் அன்பு பங்குப் பணியாளர்
பீட்டர் தும்மா

# ஜனவரி கொண்டாட்டங்கள்

## 07 ஞானிகள் திருவிழா

ஜனவரி 7 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மூன்று ஞானிகள் திருவிழா கொண்டாடப்பட்டது. திருப்பலி முடிந்து குடில் அருகில் மன்றாட்டு மற்றும் பாடலுடன் இயேசு பாலனின் ஆசீரும் வழங்கப்பட்டது.

**January 7 (Sunday) Feast of the Three Wise Men was celebrated. After mass the parishioners gathered around the crib and offered prayers.**

## 07 நோயாளர் சந்திப்பு

மூன்று ஞானிகள் இயேசு பாலனை சந்தித்து பரிசுகளை வழங்கியது போல, நோயினாலும் வயதினாலும் வீடுகளை விட்டு வெளியே வர முடியாத 35 பேரை நலம் விசாரித்து, அவர்களுக்காக மன்றாடி பங்கு குடும்பத்தின் சார்பாக பரிசு பொருள்களை வழங்கினோம்.

**On behalf of the Parish Community, a team visited 35 ailing senior citizens confined to their homes. They prayed for their health and offered gifts.**

## 07 அன்பிய விளையாட்டு போட்டி

ஜனவரி 6 & 7 நாட்களில் நமது இளைஞர் குழுவினர் நமது திறமைகளை வெளிப்படுத்தவும், உறவுகளை மேம்படுத்தவும் அன்பியங்களுக்கிடையே அருட்தந்தை பி.கே. பிரான்சிஸ் சேவியர் நினைவு போட்டிகளை நடத்தினர். பலரும் பங்கு பெற்றனர்.

**On January 6 and 7 the Parish Youth Group conducted sports events between the Anbiyams in memory of Rev. Fr BK Francis Xavier. Many participated.**

## 15 பொங்கல் விழா

ஜனவரி 15 ஆம் தேதி திங்கள் கிழமை, பொங்கல் விழாவை கொண்டாடினோம். அனைத்து அன்பியங்களும் பொங்கல் பொங்கி, கோலப் போட்டியில் பங்கெடுத்து, திருப்பலி வழியாக இறைவனுக்கு நன்றி கூறினோம். அதை தொடர்ந்து நாட்டுப்புற பாடல்கள் பாடி, நடனம் ஆடி, விளையாட்டுகளை நடத்தி மிக உற்சகத்தோடு தமிழர் திருநாளை கொண்டாடி மகிழ்ந்தோம்.

**January 15, the Pongal celebrations were held in a grand manner. Anbiyams prepared Pongal and kolam competitions were held. This was followed by folk songs and dance by the parishioners.**

## 20 மரியாயின் சேனை ஆண்டுவிழா

ஜனவரி 20 ஆம் தேதி சனி கிழமை மாலை 3.30 மணியிலிருந்து 5.30 மணி வரை மரியாயின் சேனை ஆண்டு விழா நடத்தப்பட்டது.

**January 20 (Saturday) from 3.30 to 5.30 p.m the Legion of Mary anniversary was celebrated.**

## 21 கிறிஸ்தவ ஒன்றிப்பு

ஜனவரி 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துவ ஒன்றிப்பின் ஞாயிறாக கொண்டாடப்பட்டது. ஞாயிறு திருவழிப்பாடு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.

**On January 21, the Christian Unity Sunday was celebrated.**

## 21 அரசியல் சாசனம்

ஜனவரி 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இந்திய அரசியல் சாசனமும் சிறுபான்மையரின் பாதுகாப்பும் என்கிற தலைப்பில் அருட்தந்தை ராஜாமணி தலைமையில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்வை முன் எடுத்தவர்கள் பங்குபேரவை உறுப்பினர்கள், இளைஞர்குழு மற்றும் அன்பிய இளையோர் பொறுப்பாளர்கள். இதில் ஏறக்குறைய 120 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**An awareness program was held for the parishioners to know about the basics of the Indian constitution on January 21. Rev Fr. Rajamani, a lawyer at the Madras High Court spoke. More than 120 people participated.**

## 26 விளையாட்டுப் போட்டி

ஜனவரி 26 ஆம் வெள்ளிக் கிழமை காலை திருப்பலி முடிந்தவுடன் குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடி ஏற்றப்பட்டது. அன்று காலை 9.30 மணியிலிருந்து சிறுவர் சிறுமிகளுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் மறைக்கல்வி குழு மற்றும் அன்பியங்களின் குழந்தைகள் பொறுப்பாளர்கள்.

**Flag hoisting followed by games for the children marked the Republic Day celebrations of our parish on January 26. Prizes and certificates were distributed to the winners. Catechism teachers and Anbiyam children coordinators organised the events.**

## 28 திருஅவையின் பதில்கள்

ஜனவரி 28 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணி முதல் திரு அவையின் பதில்கள் பாகம்–2 நடைபெற்றது. தூய இருதய குருத்துவ கல்லூரியின் பேராசிரியர்கள் அருட்தந்தை ரெய்மண்ட் ஜோசப், அருட்தந்தை அருள் ராஜ், அருட்தந்தை ரீகன் மேனுவேல் மற்றும் அருட்தந்தை பீட்டர் தும்மா சிறப்பான பதில்களை தந்தனர். 160 பேருக்கு மேலாக இதில் பங்கேற்றனர். இதை முன் இருந்து நடத்தியவர்கள் பங்குபேரவையினர் மற்றும் அன்பிய இறைவேண்டல் பொறுப்பாளர்கள்.

**The second part of the questions asked by our churches was held on January 28. Professors of the Sacred Heart Seminary, Poonamallee and Fr Peter Thumma, Parish Priest answered and clarified the doubts to the parishioners.**

## 28 அன்பிய ஞாயிறு

ஜனவரி 28 ஆம் ஞாயிற்றுகிழமை அன்பிய ஞாயிறாக சிறப்பிக்கப்பட்டது. சிறப்பு திருவழிபாடும் மற்றும் அன்பிய பொறுப்பாளர்களை பாராட்டும் நிகழ்வும் நடைபெற்றது.

**January 28 was celebrated as the Anbiyam Sunday. After a special mass, the Anbiyam coordinators were felicitated.**

ஜனவரி மாதத்தில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் உதவிசெய்தவர்கள் மற்றும் பங்கேற்ற அனைவருக்கும் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

# தலைமை சகோதரி வருகை

நமது பங்கு குடும்பத்தில் திரு இருதய சபை அருட்சகோதரிகள் சிறப்பாக பணி செய்கின்றனர். ஜனவரி மாதம் 10 ஆம் தேதி புதன் கிழமை, இச்சபையின் தலைமை சகோதரி அமுதா தியோஸ் வருகை புரிந்தார்கள். அந்நேரத்தில் நமது பங்கு பணிகளைக் குறித்தும் அருட்சகோதரிகள் பணிகளை குறித்தும் கலந்து பேசினோம். கலந்துரையாடல் சிறப்பாக நடந்தது.

**The Sisters of the Sacred Heart congregation are doing a great ministry in this parish. Rev Sister Amutha Theos, Superior General made the canonical visit to the Convent on January 10th. Our sincere thanks to the sisters for their dedication and unstinted support.**



# குளிர்கால போர்வைகள்

ஜனவரி மாதம் 21 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை இரவு, புனித வின்சென்ட் தே பவுல் சபை அங்கத்தினார்கள் பல இடங்களுக்கு சென்று தெருவோரங்களில் போர்வையின்றி இருந்த 25 பேருக்கு போர்வை மற்றும் உணவு தந்து ''இயேசு உங்களை நேசிக்கிறார்'என்று ஆறுதல் கூறி நற்செய்தி பணியாற்றினர். ஏழை எளியவர்களுக்காக இவர்கள் செய்து வரும் பணிகளை பாராட்டுகிறோம். மேலும் இது போன்ற நல்ல பணிகளை தேவைப்படுகின்ற ஏழை எளியோர்க்கு செய்ய ஊக்குவிக்கிறோம்.

**On January 21 (Sunday night) St. Vincent de Paul Society members walked down the streets to locate poor people sleeping on pavements without a bed sheet. They picked up 25 people and gave them bed sheets and food saying "Jesus loves you". We appreciate this kind gesture and sincerely hope more people will come forward to help the poor and the needy.**





# மறைமாவட்ட இளையோருக்கான தியானம்

இத்தவக் காலத்தில் நமது இளைஞர், இளம் பெண்களுக்காக புனித திருமுழுக்கு யோவான் மறைவட்ட அளவில் சிறப்பு தியானம் வரும் ஞாயிறு 18 ஆம் தேதி நமது பங்கு ஆலயத்தில் நடைபெற உள்ளது. நமது மறைவட்டத்தில் உள்ள 12 பங்கில் இருந்து இளைஞர்கள் வர இருக்கின்றனர். இதை முன்னிருந்து நடத்துபவர்கள் இளைஞர்கள் குழு மற்றும் அன்பிய இளையோர் பொறுப்பாளர்கள். இத்தியானம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

**A Lenten Retreat is to be held by the youth of the Holy Trinity Church on February 18 (Sunday). Youth representing 12 parishes in our vicariate are to take part. Best wishes to the youth committee members for the smooth conduct of the retreat. All are welcome.**

# தவக்காலம்

✝ பிப்ரவரி 14 ஆம் தேதி 2024 புதன்கிழமை விபூதி புதன் ஆக சிறப்பிக்கிறோம். அன்றைய நாள் முதல் மார்ச் மாதம் 23 வரை தவக்காலமும், 24 ஆம் தேதி முதல் புனித வாரத்தையும் கொண்டாடி, மார்ச் 31 ஆம் ஆம் தேதி ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறாக கொண்டாட உள்ளோம்.

✝ இந்த சிறப்பு காலத்தை எல்லோரும் பயன் உள்ள முறையில் கொண்டாட அழைக்கிறோம். அனைத்து அன்பியங்களும், பக்த சபைகளும் மற்ற குழுக்களும் அதிக ஆர்வத்தோடு நல்ல முறையில் திட்டமிட்டு செயல்படுத்த அன்புடன் வேண்டுகிறோம்.

✝ தவக்காலத்தின் அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் மாலையில் தமிழில் சிலுவைப் பாதையும், அனைத்து புதன் கிழமைகளிலும் மாலையில் ஆங்கிலத்தில் சிலுவைப் பாதையும் நடைபெறும்.

✝ மற்ற தவக்கால நிகழ்வுகள் மற்றும் புனித வார நிகழ்வுகளை உங்களுக்கு தனியாக அச்சடித்து வழங்கப்படும்.

✝ இயேசுவின் சிலுவைப்பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பில் பங்குக் கொள்ள அனைவரையும் ஒப்புரவு அருட்சாதனத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்.

**This year's season of lent begins on February 14 (Ash Wednesday). The Holy week falls between March 24 and 31. The Way of the Cross will be held on Friday evenings in Tamil and on Wednesday evenings in English. Pamphlets will be distributed in church with all the programs in detail. Kindly follow the schedule and take an active part to receive God's blessings. Please plan for your confession.**

# திருப்பண்டங்கள் கண்காட்சி

தவக் காலத்தின் சிறப்பு நிகழ்வாக ஏறக்குறைய 90 புனிதர்களுடைய திருப்பண்டங்கள் (அவர்களுடைய முடி, எலும்பு, மற்றும் துணி போன்றவற்றின் சிறு அடையாளங்களை) வைத்து பிப்ரவரி 25– ம் தேதி கண்காட்சி நடத்த உள்ளோம்; இப்புனிதர்களின் வல்லமை உள்ள பரிந்துரையை பெற்று, இப்புனிதர்களை போல வாழ தொடர்ந்து மன்றாடுவோம். இந்நிகழ்வை நமது இளைஞர் குழு மற்றும் அன்பிய இளையோர் பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்கின்றனர் அவர்களுக்கு பாராட்டும், நன்றியும்.



**On February 25 (Sunday) relics of about 90 saints are to be brought and exhibited in our parish. May their powerful intercession help us to turn to God and start a new life in the Holy Trinity. It is an initiative taken by the youth group and BCC youth ministry members.**

# பொது தேர்வுக்கான சிறப்பு ஆசீர்

பிப்ரவரி 25 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, அரசு தேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்கு சிறப்பு மன்றாட்டும் ஆசீரும் வழங்க உள்ளோம். இவ்வாண்டு அரசு பொதுத்தேர்வு எழுதும் அனைத்து மாணவ மாணவியர்களை இத்திருப்பலிக்கு அன்புடன் வரவேற்கிறோம். திருப்பலிக்கு வரும்போது தங்களுடைய தேர்வுக்கு பயன்படுத்தும் எழுது பொருட்களை கொண்டுவரும்படி கேட்டுகொள்கிறோம்.



**On February 25 (Sunday) a special prayer and blessing will be held for the children appearing for the Public exams this year. Students are asked to bring their pens at the time of blessing.**

# 2024 FEBRUARY பிப்ரவரி 2024

## திருவழிபாட்டு நாட்கள்

02–02–2024 வெள்ளி
ஆண்டவரை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் விழா
மலா 3: 1–4, தி.பா 24: 7–10, எபி 2:14–18
லூக்கா 2:22–40

03–02–2024 சனி – புனித ஆன்சுகார், பிளாசியுசு
1 அரசர்கள் 3:4–13, தி.பா:119: 9–14, மாற்கு 6:30–34

04–02–2024 பொதுக்காலம் 5ஆம் ஞாயிறு
யோபு 7: 1–4, 6,7, தி.பா. 147:1–6,
1கொரி 9:14–19,22,23, மாற்கு 1:29–38

05–02–2024 திங்கள் – புனித ஆகத்தா
1 அரசர்கள் 8:1–7,9–13, தி.பா. 132: 6–10, மாற். 6:53–56

06–02–2024 செவ்வாய்
புனிதர்கள் பால், மீக்கி, தோழர்கள்
1 அரசர்கள் 8:22–23,27–30, தி.பா.84:2–3,4,9–11, மாற்கு 7:1–13

10–02–2024 சனி – புனிதர் கொலாசுதிக்கா
1 அரசர்கள் 12:26–32, 13:33–34,
தி.பா 106:6–7,19–22, மத் 8:1–10

11–02–2024 பொதுக்காலத்தின் 6ஆம் ஞாயிறு
லேவியர் 13: 1–2, 44–46, தி.பா.32:1–2,5,11,
1கொரி. 10:31–11:1, மாற். 1:40–45

14–02–2024 புதன் – திருநீற்று புதன்
யோவேல் 2:12–18, தி.பா. 51:1–2, 3–4,10–12,15,
2கொரி 5:20,6:2, மத் 6:1–6, 16–18

18–02–2024 தவக்காலத்தின் முதல் ஞாயிறு
தொ.நூல் 9:8–15, தி.பா 25:4–9, 1பேதுரு 3:18–22,
மாற்கு1:12–15

25–02–2024 தவக்காலத்தின் 2ஆம் ஞாயிறு
தொ.நூல் 22:1–2,9–13,15–18, தி.பா. 116: 10–19,
உரோ 8:31–34, மாற். 9:2–10

## உலக நாட்கள்

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 1 | : | இந்திய கடலோர காவல் படை நாள் |
| பிப்ரவரி 2 | : | உலக ஈர நிலங்கள் நாள் |
| பிப்ரவரி 4 | : | உலக புற்று நோய் நாள்<br>உலக மனித சகோதரத்துவ நாள் |
| பிப்ரவரி 9 | : | பாதுகாப்பான இணைய நாள் |
| பிப்ரவரி 12 | : | இந்திய உற்பத்தி திறன் நாள் |
| பிப்ரவரி 13 | : | உலக வானொலி நாள் |
| பிப்ரவரி 20 | : | சமூக நீதிக்கான உலக நாள் |
| பிப்ரவரி 21 | : | உலக தாய் மொழி நாள் |
| பிப்ரவரி 22 | : | உலக சிந்தனை நாள் |
| பிப்ரவரி 27 | : | உலக அரசு சாரா நிறுவனங்களின் நாள் |
| பிப்ரவரி 28 | : | இந்திய அறிவியல் நாள் |

## நமது பங்கின் ஜனவரி மாத அருட்சாதன நிகழ்வுகள்

### திருமுழுக்கு

- சியோன் அன்டோ

வரவேற்கிறோம்



### திருமணம்

- பிரவின் ராஜ் – டயானா மேரி

வாழ்த்துகிறோம்

### இறப்பு

- உத்திரேசம்மாள் இந்திராணி

மன்றாடுவோம்





இவ்வாண்டு தவக்கால தியானம் மார்ச் 1,2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. மார்ச் 1 மற்றும் 2 தேதிகளில் (வெள்ளி & சனி) மாலை 6 மணிலிருந்து 8.30 மணி வரை நடைபெறும். மார்ச் 3 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும். இந்நாள்களில் தியானம் முடிந்த பிறகு உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாதா தொலைகாட்சி அருட்தந்தையர்கள் இத்தியானத்தை வழி நடத்துகின்றார்கள். அனைவரும் தவறமால் கலந்து கொள்வோம்.

**This year's Lenten Retreat will be organized by the Priests of Madha TV on March 1, 2 and 3. The timings on March 1 (Friday) and 2 (Saturday) will be 6 p.m to 8.30 p.m and on March 3 (Sunday) 8.30 a.m to 1 p.m. Food will be provided. All are requested to take part in the retreat.**

## தவக்கால திருயாத்திரை

ஒவ்வொரு ஆண்டும் தவக்கால திருயாத்திரையாக பல ஆலயங்களுக்கு சென்று வந்து உள்ளோம். இந்த ஆண்டு நாம் 25 ஆம் ஆண்டு தவக்கால திருயாத்திரையை ஏற்பாடு செய்துள்ளோம். புனித தேவசகாயம் தொடர்புடைய திருத்தலங்களையும், திருவனந்தபுரத்தில் உள்ள சில ஆலயங்களையும் மார்ச் 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் பார்வையிட்டு மன்றாட உள்ளோம். ஏற்கனவே 127 நபர்கள் இந்த திருப்பயணத்திற்கு முன்பதிவு செய்து உள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. தவக்கால திருயாத்திரை குழுவினருக்கு நன்றி.




**Every year a special programme during lent is the parish pilgrimage. This being the 25th year, it has been planned to visit shrines connected to St. Devasagayam and some churches in Trivandrum (Kerala). The dates of the pilgrimage are March 8 to 10. 127 people have confirmed and their train tickets are already booked.**



திருக்காட்சி பெருவிழா ஆசியினை
பங்குத்தந்தை வழங்கினார் (07.01.2024)



பொங்கலோ பொங்கல் (15.01.2024)



மறைக்கல்வி விளையாட்டு போட்டிகளில்
வெற்றி பெற்ற அணிகள் (26.01.2024)



அருட்தந்தை பி. கே. பிரான்சிஸ் சேவியர் நினைவுப்
போட்டிகளில் பரிசுபெற்ற இளைஞர்கள் (15.01.2024)



இந்திய அரசியல் சாசனமும் சிறபான்மையினரின்
பாதுகாப்பும் குறித்த கருத்தரங்கு (21.01.2024)



கொடிகளுடன் மறைக்கல்வி பிள்ளைகள்



பொங்கலை பகிர்ந்து உண்ட பங்கு மக்கள்



குடியரசு நாள் விழாக் கொண்டாட்டம் (26.01.2024)



மரியாயின் சேனை ஆண்டுவிழா (20.01.2024)





திருஅவையின் கேள்வி பதில்கள் (28.01.2024)


Arockia Sagayaraja A
Managing Director
Saffrawn
Facility Solutions Pvt Ltd.
Our Services
Housekeeping Services
Corporate Cleaning Services
Pest Control
Hotel & Restaurant Services
No.109 Padikuppam Main Road, Kamaraj Nagar, Anna Nagar West, Chennai-600040
Mail: saffrawnfacility@gmail.com Contact No.7823979791/9841892656
WWW.SAFFRAWN.IN


SONA COATING PVT. LTD.
Plot No. 2, Nithiyam Kamal, Spartan Nagar, Mugappair (East)
89396 56698 / 99419 58212 | Email: sonacoatingpvtltd@gmail.com
C SANTHOSH
www.sonacoating.in


YAHWEH PITSTOP
We Innovate Mobility
Address: No.84, 1st Main Road, Eri Scheme, Mogappair East, Ch-37.
Our Services:
Tyres
Wheel Alignment
Wheel Balancing
Puncture
Nitrogen
Foam Wash
Polishing & Detailing
Accessories
Sun Film
Seat Cover
Floor Mat
99405 21630 98409 15347
Door Step Assistance & Delivery



ROY ENGINEERINGS
MOB: 9444911378 / 9600142309
Hexagon Nut
Thread Coupling
Worm Gear
VMC Tool Catcher
Helical Gear
VMC Atc Arm
Gear Shaft
Bevel Gear
Aluminium Flange
PB Worm Gear Shaft
PB Nut
Brass Gear Shaft
Spur Gear
Nylon Bush
PB Spur Gear


EICQU
STUDY ABROAD
& VISA
10+ COUNTRIES
100+ UNIVERSITIES
CONTACT US
08270871090
5th Floor, Awfis, Uthamar Gandhi Rd, opp. The Park Hotel, Nungambakkam, Chennai, Tamil Nadu 600034
More Information : www.eicqu.com


RAMESH
HARDWARES
DR. FIXIT
WATERPROOFING EXPERT
asianpaints
FinOlex
PIPES
Asian Paints | Sanitary Wares | Pipes
Fitting Godrej Locks | Welding Googs
Valaiyapathy Salai, Mogappair East
Mob: 79043 88322


WIGEON TOWERS
Property Developers
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
AISHWARYA AVENUE –1
Podavur Village kanchipuram,
Near Parandur
MADHAVARAM
Vadaperumbakkam
Perungavur-2
Chennai 600 103
SUMATHI AMMAL NAGAR
Oragadam Junction
Kunnavakkam
Kancheepuram District
R. Ramesh Babu
Manager
98849 88340
Layout only
Ph No: 044-4851 5365, 044-4767 1228


WIGEON
TECHNOLOGIES
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
Mfrs.of Jigs & Fixtures,
Press Tools & Machine
Spare Jig Boring
& Fabrication job works
No: 74/9, Periyar 5th cross street, Srinivasa Nagar, Padi
Ph no: 044- 26252333
Mail Id: wigeontech12@gmail.com


YOUR EASY AND FASTEST WAY OF GROCERY SHOPPING
SHOP NOW
ABEL
GROCERY STORE
Natural product with great price
SUPER SALE
44/20, Nehru Nagar, 1st street, Ambattur, Chennai - 600053
FOR MORE INFORMATION, CONTACT
ABEL MALIGAI MANDI - 9940172355
WHATSAPP ORDER FOR DOOR DELIVERY


R. INBARAJ
Proprietor
M: 9382139151
Manpower / staffing (Regular & Contractual)/ all the HR allied services
ROYAL ASSOCIATES
Placement & Consultants
(ISO 9001:2015 Certified Company)
3/475 Valayapathi Salai, Mugappair East, Chennai 600 037.
Tel: 26561970 Email: royalcorporate@gmail.com. www.royalassociates.co


NEWALL ENGINEERING WORKS
Mfrs of Cutting Tools &
Precision Engineering Components
M: 99401 54897, 98400 54817
www.newallengg.in